**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W.10** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | ராஜேந்திரன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். கல்பனா பேட்டரி கடையில் வேலைசெய்கிறேன். வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இறந்தவரின் மனைவி மற்றும் மகன் ஆவார். இறந்தஅன்று நான் போனேன். அங்கு கும்பலாக இருந்தார்கள். போலிசார் அங்கு இருந்தார்கள். கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். அங்கு 1வது எதிரி நின்று கொண்டுஇருந்தார். என்னிடம் காட்டப்படும் 1வதுஎதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். 1வது எதிரியை போலிசார் விசாரித்தார்கள். நான் சரியாக கவனிக்கவில்லை. என்முன்னிலையில் போலிசார் எதையும் கைப்பற்றவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்துகள் முறையே அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் முன்னிலையில் போலிசார் 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பயன்படுத்திய பைப்புகளை வீட்டில் பின்னால் உள்ள புதரில் மறைத்துவைத்திருப்பதாக சொல்லி என் முன்னிலையில் 1வது எதிரி எடுத்து ஆஜர் படுத்தினார் என்றால் பைப் என்று சொன்னார். புதர் பற்றி தெரியாது. போலிசார் பைப்பை எடுத்தார்கள். என்ன பைப் என்று நான் பார்க்கவில்லை. அதை கைப்பற்றியதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ராமகிருஷ்ணன் இறந்துவிட்டதாக யார் தகவல் சொன்னார்கள் என்றால் தெரிந்தவர் சொன்னார். பெயர் தெரியாது. நான் சுமார் 11.00 மணிவாக்கில் அவர் வீட்டிற்கு சென்றேன். அங்கு யார் யார் இருந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சொந்தக்காரர்கள் இருந்தார்கள். கும்பலாக இருந்தார்கள். அங்கு வைத்து தான் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அங்கு வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து வாங்கினார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. காவல்துறையினர் இறந்துபோனதற்கு கையெழுத்து போடுங்கள் என்று சொன்னதால் நான் போட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:</u>**இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.